

சேலம் மாவட்டத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் –கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நேற்று முன்தினம் பொது மக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ராஜேந்திரன், கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர்

# 20 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களைச் சந்தித்து பரிந்துரைகளைப் பெற்றனர்!

சேலம்,பிப்.13-

2024 மக்களவை தேர்தலையொட்டி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினின் அறிவுரைப்படி இக்குழு பிப்ரவரி 5 ஆம் தேதி முதல், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு சென்று மக்களை நேரில் சந்தித்து பரிந்துரைகளை பெறும் பணியை தொடங்கி உள்ளது. 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்திட வேண்டிய தமிழ்நாட்டின் கருத்துகள்' என்ற தலைப்பில், பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டு வருகிறது.

தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு நேற்று முன்தினம் (11/02/2024) சேலம் மாவட்டத்தில் மக்களை சந்தித்தனர். சேலத்தில் அமைந்துள்ள ஹோட்டல் சென்னிஸ் கேட்வே இல் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றார். அதில் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன், கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி., திமுக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., திமுக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மாநகர மேயர் பிரியா ஆகியோர் பரிந்துரைகளை மக்களிடமிருந்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு மாவட்டச்செயலாளர் சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டச்செயலாளர் இராஜேந்திரன், மக்கள் பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கொலுசு உற்பத்தியாளர் சங்கங்கள், லாரி உரிமையாளர்கள், வணிகர் சங்கங்கள், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள், மக்கள் நலச்சங்கங்கள், செவிலியர்கள், தொழில் முனைவோர், பல்வேறு அமைப்புகளைச்சேர்ந்தவர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்த பரிந்துரையை ஆர்வமுடன் வழங்கினர்.

## கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# விருத்தாச்சலத்தில் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



விருத்தாச்சலம், பிப்.13-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்' என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் விருத்தாச்சலத்தில் வருகிற 17-ஆம் தேதி அன்று நடைபெறுகின்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை யாற்றுகிறார் என்று கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை வருமாறு:-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் விருத்தாசலத்தில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" - பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 17.2.2024-சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, வானொலித்திடல் விருத்தாச்சலத்தில் என் (அமைச்சர் சி.வெ.கணேசன்) தலைமையில் நடைபெறுகின்றது.

இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றத்தின் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (13ம் தேதி) காலை 10.00 மணிக்கு நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டு க்கொள்கிறேன்.

**பொருள்:** 1.உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் நாடாளுமன்றத் தொகுதி கூட்டம் தொடர்பாக, 2.கழக ஆக்கப்பணிகள். 3. 16ஆம் தேதி நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு தஞ்சாவூர் வருகை.

**என்.கௌதமன்**
செயலாளர்,
நாகை மாவட்ட தி.மு.க.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு வெற்றி விழா பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். உடன் செ.இராமலிங்கம் எம்.பி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.கே.முத்துசெல்வம், என்.நாசர், மாநிலக் கழக நிர்வாகிகள் ஆடுதுறை து.உத்திராபதி, டி.ஆர்.கே.விஜயன், பேரூர் செயலாளர்கள் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியன், ச.கபிலன், பேரூர் துணைச் செயலாளர் பி.கே.கோபால் உள்ளீட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கோவையில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை மேற்கு மாவட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளர் மறைந்த பையா (எ) கிருஷ்ணன் இல்லத்துக்குச் சென்று, அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் கே.என். நேரு மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ் முருகன் நேற்று முன்தினம் (11.02.2024) காலடிப்பேட்டை தனலெட்சுமி பார்ட்டி ஹாலில் நடைபெற்ற கழக நிர்வாகி பி.எஸ். சைலஸ் – சுகந்தி தம்பதியின் மகள் பி.எஸ்.பொய்யாமொழி – சி.எஸ்.ராஜ்குமார் திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில்

# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் மனுக்களைப் பெற்றனர்!

### கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

கிருஷ்ணகிரி, பிப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 2024 நாடாளுமன்றத் தேர்தலில் முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது இந்த குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களிடம் கருத்துக்களை கேட்டு வருகிறார்கள். அதன்படி கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 2024 நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்து கேட்பு கூட்டம் ஓசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறது.

தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்துக் கேட்பு கூட்டம் கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறது. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு உறுப்பினர்கள் சட்டமன்ற கொறடா, மாநில வர்த்தக அணி துணை தலைவர் கோவி. செழியன் அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., சென்னை மேயர் திருமதி. பிரியா உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கட்சியினர், பொதுமக்கள் மனுக்களை கொடுத்தனர்.

இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., செய்திருந்தார். இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., தர்மபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பழனியப்பன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், அமைப்பு சாரா தொழிலாளர்கள், மகளிர் சுய உதவி குழு பிரதிநிதிகள், சிறு குறு நிறுவனங்களின் உரிமையாளர்கள், பெண்கள் நல அமைப்பு நிர்வாகிகள், சமூக நல அமைப்புகள், நகர் நல சங்கத்தின் நிர்வாகிகள், ஓட்டல் உரிமையாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாற்றுத் திறனாளிகள், அமைப்பு நிர்வாகிகள், வாகன ஓட்டுனர்கள், கழக நிர்வாகிகள், உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களுடன் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி., நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் எங்களை பணித்திருப்பதை தொடர்ந்து நாங்கள் ஒவ்வொரு மாவட்டமாக கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த சங்கங்கள் பொதுமக்களை நேரில் சந்தித்து அவருடைய கோரிக்கைகளை மனுவாக பெற்று வருகிறோம். இன்று கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களிடம் கோரிக்கைகளை பெற வந்திருக்கிறோம் இந்த பகுதியில் உள்ள தொழிலாளர்கள் விவசாயிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் கோரிக்கைகளை எங்களிடம் கொடுத்துள்ளார்கள். இன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த பகுதியில் உள்ள மக்கள் அதிகப்படியாக ஜி.எஸ்.டி.யில் இருக்கிற பிரச்சினைகளை எடுத்து கூறியிருக்கிறார்கள். இங்கே சிறு, குறு தொழில் செய்பவர்களும், வியாபாரிகளும் இது குறித்து எடுத்துக் கூறியருக்கிறார்கள் இது அனைத்தையும் கொண்டு சென்று நாங்கள் தேர்தல் அறிக்கையாக தயார் செய்து முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க உள்ளோம். அவர்கள் அதனை தேர்தல் அறிக்கையாக வெளியிடுவார். தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதியுடன் புதுச்சேரியையும் சேர்த்து 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி அமோக வெற்றி பெறும் அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மேலும் தூத்துக்குடி பகுதியில் மிகப் பெரிய அளவில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. பாலங்கள், சாலைகள் தற்காலமாக சரி செய்யப் பட்டுள்ளன நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஆயத்த பணிகள் நடக்கிறது. தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டத்தில் சேதமான சாலைகள் பாலங்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டுள்ளது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பைசா கூட மத்திய அரசிடம் இருந்து நிவாரண நிதி வரவில்லை ஆனால் மக்களுக்கான நிவாரண உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார் பாசிச ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் நிதி ஒதுக்கீடு இன்றி பாதிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு மட்டுமின்றி பல மாநிலங்கள் முதல்வர்கள் களத்திற்கு வந்து போராட வேண்டிய நிலை உள்ளது என தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம்,

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் தாமரைச் செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன் ,மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன் , அரியப்பன், மாநில மகளிர் உரிமை ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் பி.எஸ்.

சீனிவாசன், கிருஷ்ணகிரி கிழக்கு,மேற்கு ,தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்டத்தை சார்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள்,

நகராட்சி பேரூராட்சி, ஊராட்சி தலைவர்கள், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நகர அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 584 மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.விழாவில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்,முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம்.பெ.சுப்ரமணி, தருமபுரி எம்.எல்.ஏ., எஸ்.பி. வெங்கடேஸ்வரன், முன்னாள் நகரச் செயலாளர், பெற்றோர், ஆசிரியர் கழக தலைவர் மே.அன்பழகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.